# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2005, ஓகத்து மாதம் 05 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

# 2005 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ. 45/2004
2835

## 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "தண்டனைத் தீர்ப்புக்களில் எவையேனும் இரண்டை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தண்டனைத் தீர்ப்புக்களில் எதனையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

285 (2), 294, 295, 296, 297, மற்றும் 298, என்னும் பிரிவுகளை நீக்குதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 285 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவும், 294, 295, 296, 297, 298, ஆகிய பிரிவுகளும் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 299 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 299 ஆம் பிரிவு அதன் (3) ஆம் உட்பிரிவில், "தப்பியோடிய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர்மீது மரண தண்டனை அல்லது குற்றப்பணம் அல்லது மறியலுடனான அல்லது மறியலில்லாத சவுக்கடித் தண்டனை ஆகிய தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்படும்போது, அத்தகைய தண்டனைத் தீர்ப்பானது, மரணத்துக்கானதாக, குற்றப் பணத்துக்கானதாக அல்லது சவுக்கடிக்கானதாக இருந்தால் இதனகத்து முன்னர் அடங்கியுள்

ஏற்பாடுகளுக்கு அமைவாக, உடனடியாகப் பயனுறுதல் வேண்டும் ;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தப்பியோடிய, குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர் மீது மரண தண்டனை அல்லது மறியலுடனான அல்லது மறியலில்லாத குற்றப்பணம் ஆகிய தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்படும்போது, அத்தகைய தண்டனைத் தீர்ப்பானது, மரணத்துக்கானதாக அல்லது குற்றப்பணத்துக் கானதாக இருந்தால் இதனகத்து முன்னர் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, உடனடியாகப் பயனுறுதல் வேண்டும் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 317 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 317 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிடுதவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் "(1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்திற்றவிர எல்லா விடயங்களிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எல்லா விடயங்களிலும்" என்னும் சொற்களைப் பதிலிடுவதன் மூலமும்.".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*